# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2028/45 - 2017 ජූලි මස 19 වැනි බදාදා - 2017.07.19

*2028/45 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43 ஆம் உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் வண்ணம் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2015, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1933/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு காலத்துக்குக்காலம் திருத்தப்பட்ட அறிவித்தலானது, 2017, யூலை மாதம் 19 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகின்றதென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01.
2017, யூலை 19.

**அட்டவணை**

(1) அவ்வறிவித்தலில் "தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு (இலக்கம் 3)" விடயத் தலைப்பு தொடர்பாக பின்வருமாறு:-

(அ) அதன் I ஆம் நிரலில் 10 ஆவது விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம்,

"11. 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் செயற்படுதல்.

12. II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்கள்

13. II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களை மேற்பார்வை செய்தல்"

(ஆ) அதன் II ஆம் நிரலில் "*1*. தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் பற்றிய அலுவலகம் (அமைச்சின் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாகும்) எனும் விடயத்திற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம்,

"*2*. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்"

(இ) அதன் III ஆம் நிரலுக்குப் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம்,

"காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டம் (2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கம்)"

8-152

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.